# Joint Press Release of the 6th Deputy National Security Adviser Level Meeting of the Colombo Security Conclave

July 07, 2022

### கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் 6 வது துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்திலான கூட்டத்தம் தொடர்பான கூட்டு செய்தி வெளியீடு

ஜூலை 07, 2022

இந்தியா, மாலத்தீவுகள், மொரீஷியஸ் மற்றும் இலங்கையை உள்ளடக்கிய கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் உறுப்பு நாடுகள், கொச்சியில் உள்ள இந்திய தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகம் 2022 ஆம் ஆண்டு ஜூலை 7 அன்று நடத்திய 6 வது துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்டக் கூட்டத்தை வெற்றிகரமாக முடித்தன. பங்களாதேஷ் மற்றும் சீஷெல்ஸில் இருந்து பிரதிநிதிகள் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்த நாடுகளைச் சேர்ந்த மாண்புமிகு, இந்தியக் குடியரசின் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் திரு. விக்ரம் மிஸ்ரி, மாலத்தீவு குடியரசின் வெளியுறவுச் செயலாளர் திரு. அகமது லத்தீப்; மொரீஷியஸ் குடியரசின் பிரதமர் அலுவலகத்தின் பாதுகாப்பு விடயங்களின் பிரதான ஒருங்கிணைப்பாளர் திரு. யோதிஸ்டீர் தேக்கா, மற்றும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பாதுகாப்புப் படைத் தலைவர் ஜெனரல் சவேந்திர சில்வா, WWV, RWP, RSP, VSV,USP, ndc, psc, MPhil, ஆகியோர் அவர்களின் பிரதிநிதி குழுக்களை வழிநடத்தினர். இலங்கை கடற்படையின் கடற்படை நடவடிக்கைகள் மற்றும் கடற்படை வெளிநாட்டு ஒத்துழைப்பின் இயக்குநர் மற்றும் தற்காலிக செயலாளரான, கடற்படைத் தலைவர் எம்.எச். நிஷாந்த பீரிஸ், RSP, USP, இலங்கை, கொழும்பில் உள்ள CSC செயலகம், ,பிரதிநிதித்துவப்படுத்தினார். பங்களாதேஷில் இருந்து வந்த பிரதிநிதிகள் குழுவிற்கு ஆயுதப் படைப் பிரிவின் முதன்மைப் பாதுகாப்பு அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் வேக்கர் உஸ் ஜமான் SGP, psc, தலைமை வகித்தார். சீஷெல்ஸ் பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி மாண்புமிகு சைமன் ஆர்கேஞ்ச் டைன் அவர்கள், சீஷெல்ஸ் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

2022-23 ஆம் ஆண்டிற்கான ஒத்துழைப்பிற்கான திட்ட வரைபடத்தை

அமுல்படுத்துவது மற்றும் 2022 ஆம் ஆண்டு மார்ச் 9 முதல்10 ஆம் தேதி வரை மாலைதீவில் நடைபெற்ற கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் 5 வது NSA மட்டத்திலான கூட்டத்தில் பின்வரும் ஐந்து தூண்கள் குறித்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து பங்கேற்பாளர்கள் பேசினர்:

- கடல்சார் பாதுகாப்பு மற்றும் பத்திரம்
- பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்துக்கு எதிராகப் போராடுதல்
- கடத்தல் மற்றும் எல்லைகளைத் தாண்டி செய்யப்படும் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களை எதிர்த்துப் போராடுதல்
- சைபர் பாதுகாப்பு, முக்கியமான உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தைப் பாதுகாத்தல்
- மனிதாபிமான அடிப்படையில் உதவி மற்றும் பேரிடர் நிவாரணம்

**புதுடெல்லி**
**ஜூலை 07, 2022**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.